# மில்க்வைற் செய்தி
# Milk White News

தபாற்பெட்டி இல. 77 யாழ்ப்பாணம். தொலைபேசி: 23233

கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் ★ தை 1984 ★ இதழ் 97



84

## எண்பத்து நான்கே வருக

**ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்து நான்கு என்னும் இலக்கப் பெயர் பெற்ற புத்தாண்டே வருக!**
**உன்னை நம்பி வாழ்த்துக்கூறி வரவேற்கின்றோம்.**

நீ எங்கள் எல்லோருக்கும் இனம், மதம், நிறம், முதலிய பாகுபாடுகள் காட்டாமல் நன்மை செய்வாயாக. உனது ஆட்சிக் காலமாய 366 நாள்களில் தர்மம் தலைதூக்குவதாக. எல்லோருடைய நாவிலும் உண்மை உதிப்பதாகுக. எல்லோரும் நல்லதையே சிந்தித்து, நல்லதையே பேசி, நல்லதையே செய்வார்களாக. எல்லோரும் நல்லவர்கள். கிரகக் கோளாறு காரணமாக அவர்கள் மனந் திரிபுபடுவதும் உண்டு. உன் ஆட்சிக் காலத்தில் கிரகங்கள் ஒழுங்காக நிலவுவனவாகுக. பருவகாலங்கள் உரிய முறையில் பயன்தருவனவாகுக. விளைவு பெருக்கமடைவதாகுக. உற்பத்தி அதிகரிப்பதாக. உழைப்பு உறுதியும், மேன்மையும் அடைவனவாகுக. எங்கள் எதிர்காலச் செல்வங்கள், எங்கள் இளைஞர்கள் விரக்தியடையாமல் திருப்தியும் மகிழ்ச்சியும் அடைவார்களாக. அவர்கள் படிப்புக்குத்தக்க பெறு பேறுகளும், பெறுபேறுகளுக்குத்தக்க வேலைவாய்ப்பும் பெறுவார்களாக. ஆண்கள் பெண்கள் ஒழுக்கத்தைத் திண்மையாகக் காத்து எங்கள் பண்பாட்டைப் பேணுவார்களாக. உல்லாசப் பிரயாணிகள் எம்மைப் பார்த்து ''இவர்கள் உத்தமர்கள்'' என்ற உளப்பாங்குடன் எம்மை நோக்குவார்களாக. எங்களை வாழவைப்பாயாக.

**வருக! வருக! வருக!**



கரம்பொன் புஸ்ப மகளிர் கல்லூரியில் நடைபெற்ற மரம் நாட்டு விழாவின்போது மில்க்வைற் அதிபர் குத்துவிளக்கை ஏற்றி விழாவை ஆரம்பிக்கின்றார்.
அருகில் கல்லூரி அதிபர் காணப்படுகிறார்.

★ தக்கவன் தன்னைப்பற்றி எண்ணுவது இல்லை ★

உ
சிவமயம்






## திருநாவுக்கரசுநாயனுர் தேவாரம்

### திருப்பூந்துருத்தி — திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

நில்லாத நீர்சடைமேல் நிற்பித் தானை
நினையாவென் னெஞ்சை நினைவித் தானைக்
கல்லா தனவெல்லாங் கற்பித் தானைக்
காணு தனவெல்லாங் காட்டி னானைச்
சொல்லா தனவெல்லாஞ் சொல்லி யென்னைத்
தொடர்ந்திங் கடியேனை யாளாக் கொண்டு
பொல்லாவென் நோய்தீர்த்த புனிதன் தன்னைப்
புண்ணியனைப் பூந்துருத்திக் கண்டேன்
[நானே.

திருச்சிற்றம்பலம்

ஒழுகுந் தன்மைத் தான நீரைத் தமது சடையிலே நிறுத்தியருளியவரை, அலமந்து திரியும் நெஞ்சைத் தம்மை நினைக்கச் செய்தருளியவரை, முன்னர் அறியாதனவான சரியை நெறித் தொண்டுகளை அறிவித்தருளியவரை, முன்னர் கண்டறியாதனவெல்லாம் காணவைத்தருளியவரை, உபதேசம் வாயிலாக உணர்த்தப்பெருதனவெல்லாம் உணர்த்தியருளியவரை, இவ்வாறெல்லாம் அடியேனை ஆளாகக் கொண்டருளி, அடியேன் உற்ற பெருநோயைத் தீர்த்தருளிய பெம்மானுய தூயவனைப் புண்ணியனைத் திருப்பூந்துருத்தி என்னும் திவ்விய திருப்பதியிலே எழுந்தருளியிருப்ப அடியேன் கண்டு கொண்டேன்.

## அலையாத இன்பம்

சுவாமி கெங்காதரானந்த

இதயத்தைப் புனிதப்படுத்த உனது பேராற்றலும் பேரறிவும் வெளிப்படும்.

ஜீவசுகம் நிறைந்த சுகவாழ்வை எல்லோரும் தேடிக் கொள்ளலாம்.

எல்லோருக்கும் குரு வணக்கமும் தெய்வ வழிபாடும் அவசியமானவை.

ஒழுங்காக நல்ல முறையில் பிராணுயாமம் செய்வதால் எண்ணங்கள் ஒடுங்கி மனம் சாந்த நிலைக்கு வரும்.

சாந்த நிலையில் செய்யும் ஜெபம் விரைவில் கூடிய பயனைத் தரும்.




## கள்ளாமை

பிறரை வஞ்சித்து அவருடைய பொருளைக் கவர நினையாமை.

உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல்.

பிறன் ஒருவனுடைய பொருளை அவன் அறியாவண்ணம், சூழ்ச்சியாகத் திருடுவோம் என்று மனத்தில் நினைத்தலும் பாவமேயாகும்.

### Avoiding Fraud

It is sinful even to think in terms of getting another persons property.

## 1984 ஜனவரி மாத நிகழ்ச்சிகள்

| | | | |
|---|---|---|---|
| 1 | ஞாயிறு | — | தமிழ் தாதா தாமோதரம்பிள்ளை நினைவு தினம் |
| 2 | திங்கள் | — | அமாவாசை விரதம் |
| 10 | செவ்வாய் | — | இரவு 11-38 அட்டமி |
| 11 | புதன் | — | அட்டமி - நவமி<br>கெர்ப்போட்டம் முடிவு |
| 12 | வியாழன் | — | இரவு 1-44 வரை நவமி |
| 14 | சனி | — | கார்த்திகை விரதம்<br>சுவர்க்கவாயில் ஏகாதசி<br>உத்தராயண புண்ணிய காலம் |
| 15 | ஞாயிறு | — | தைப்பொங்கல்<br>தமிழ் தைமாதப் பிறப்பு<br>சு. நடேசபிள்ளை நினைவு |
| 16 | திங்கள் | — | பிரதோஷ விரதம்<br>பட்டிப் பொங்கல் |
| 18 | புதன் | — | பூரணை விரதம் |
| 19 | வியாழன் | — | தைப் பூசம் |
| 24 | செவ்வாய் | — | இரவு 5-16 அட்டமி |
| 25 | புதன் | — | அட்டமி - நவமி |
| 26 | வியாழன் | — | நவமி இரவு 2-31 வரை |
| 28 | சனி | — | ஏகாதசி விரதம் |
| 30 | திங்கள் | — | பிரதோஷ விரதம்<br>காந்தியடிகள் நினைவு தினம் |
| 31 | செவ்வாய் | — | மாத்தளை முத்துமாரி கொடி |

★ மிகைபட்ட செல்வம் அழிவுக்குக் காரணம் ★

# கருக்குமட்டை தரும் காசு

**K. சம்பந்தம் பனைத்தொழில் ஆலோசகர்**

''பனந்தும்பு டாலர் சம்பாதிக்கிறது என்பதை சிலர் மட்டும்தான் அறிவார்'' என்று காந்தியடிகளின் குடிசைத் தொழில் ஆலோசகர் டாக்டர் ஜே. ஸி. குமரப்பா 1955-ல் தமிழகத்தில் உடன்குடி, மத்திய பனைத்தொழில் மாதிரி வழிகாட்டி நிலையத்தில், லயன் கிளப் கூட்டத்தில் நடத்திய கருத்தரங்கில் தெரிவித்தார்.

உண்மை. இன்றுங்கூட கருக்குமட்டை டாலரை சம்பாதிக்கிறது என்பதை அதிகப்பேர் அறியவாய்ப்பில்லை. இந்தியாவிலிருந்து பனந்தும்பை சுமார் 30 அயல் நாடுகள் வாங்குகின்றன. அவற்றுள் ஜப்பான், அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய நாடுகளுமாகும். முக்கியமாய் ஆறு நாடுகள் இந்தியாவிலிருந்து கொள்முதல் செய்யும் தும்பில் 80% சதமானத்தைக் கீழ்க்காட்டியவாறு வாங்குகின்றன.

| | | |
|---|---|---|
| ஜப்பான் | 51–00 | சதமானம் |
| அமெரிக்கா | 9–00 | ,, |
| இங்கிலாந்து | 8–00 | ,, |
| மேற்குஜேர்மனி | 5–00 | ,, |
| போலந்து | 3–50 | ,, |
| பெல்ஜியம் | 3–50 | ,, |

கழிவாகக் கருதப்படும் கங்குமட்டையிலிருந்து காசு சம்பாதிப்பதை சுமார் 70–80 ஆண்டுகளுக்கு முன்பு தெரிந்திருந்த இலங்கை மக்கள் முக்கியமாய் யாழ்ப்பாண மக்கள் இதை இன்று அடியோடு மறந்துவிட்டனர்.

கங்குமட்டைகள் மரங்களில் களையாமல் காய்ந்து வீணாகிக்கொண்டிருக்கின்றன. கங்குமட்டைகள் வருஷா வருஷம் அல்லது இரண்டு ஆண்டுகளுக்கொருமுறை களையப்படவேண்டும். களையப்படாத கங்குமட்டையால் தேசியச் செல்வம் விணாகிறது. அதேசமயத்தில் களையப்படாத கங்குமட்டைகள் பனையின் வளர்ச்சிக்கும் திடமாய் வளர்வதற்கும் இடையூறாக இருப்பதை, விஞ்ஞான ஆராய்ச்சி மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் கங்குமட்டைகளிலிருந்து தும்பெடுக்க சிறு இயந்திரங்களைக்கூட கண்டுபிடித்து உபயோகித்து வந்த யாழ்ப்பாண மக்கள் எப்படி பனையின் செல்வத்தைப் பயன்படுத்துவதில் பாராமுகமாய் இருந்து விட்டனர் என்பது தெரியவில்லை.

யாழ்ப்பாணத்தின் இயற்கைச் செல்வம் பனைகளையும் சார்ந்துள்ளது. கைத்திறன் மிக்க ஆண்களும், பெண்களும் பனைகளைப் பயன்படுத்தத் தெரிந்திருந்தும், நாளடைவில் பனைத்தொழிலை நலிவடைய விட்டுவிட்டனர்.

''உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் - வீணில்
உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்''
— பாரதி

தொழிலுக்கு இழிவில்லை. சுமார் ஒருகோடி பனைகள் இலங்கையில் உள்ளன. குறைந்தது 10-20 சதமானம் வடலி மரங்கள் உள்ளன. நயமான, முதல்தர கறுப்புத் தும்பை கங்குமட்டைகள் சுமந்துகொண்டிருக்கின்றன. ஏன் நாம் பயன்படுத்தவில்லை. போனது போகட்டும்! நாட்டின் பொருளாதாரத்தைப் பெருக்க முன்வருவீர்.

## தும்பு சேகரிக்கும் முறை

இலங்கை அரசின் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையும், பனம் பொருள் அபிவிருத்திச் சபையும், பொதுநல நாடுகள் மூலம் இந்திய நிபுணரை அழைத்து வந்து பனையின் பயனைப்பெற ஏற்பாடு செய்துள்ளது. ஆலோசகர் கிராமம், கிராமமாய் சென்று எளியமுறையில், வீட்டில் ஓய்வு நேரத்தில்கூட ஒரு கைக்கொட்டாப்புளியை வைத்து, பத்தலைத்தட்டி தும்பெடுக்கும் முறையை செய்து காண்பித்து வருகிறார். பெண்கள்தான் இதில் அதிகமாக ஈடுபடலாம். ஒரு பெண் ஓய்வு நேரத்தில் தும்பு தயாரிக்க முயன்றால் தினம் குறைந்தது 2 கிலோ தயாரிக்கிறார்கள்.

சிந்தியுங்கள்! செயலாற்றுங்கள்!

சிறந்த ஊதியம் பெறுங்கள்!

குறிப்பு:- மேல் விபரம் வேண்டுவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதவும்.

K. சம்பந்தம்
பனைத்தொழில் ஆலோசகர்,
பனம் பொருள் அபிவிருத்திச் சபை,
தேசிய வீடமைப்புக் காரியாலயம்,
யாழ்ப்பாணம்.

## மண்டைதீவு மக்களின் மனமார்ந்த பாராட்டும் நன்றியும்

யாழ்ப்பாணம் மண்டைதீவில் பனம்பொருள் உற்பத்தியாளர் ஐக்கியநாணய சங்கத்தார் தங்கள் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் மில்க்வைற் தொழிலதிபர், தாலகாவலர் கனகராசா செய்த உதவிகள் உபகரிப்புகளுக்கு நன்றி தெரிவித்துள்ளார்கள். மண்டைதீவு பனை நிபுணர் தமிழ்நாட்டுச் சம்பந்தம் அவர்கள் முயற்சியால் விரைவில் ஏற்றுமதிக் கிராமமாக அமையும்.

## கன்றும் கனியுதவும்

கன்றும் கனியுதவும் என்பது மரங்கள் வாழையடி வாழைபோல உதவும் என்பதாகும். கொடைவள்ளல் பாரியின் குழந்தைகள் ஔவையாருக்குத் தங்கள் துன்பத்திலும் உதவியும் உபகரிப்பும் செய்தமையைப் புலவர்கள் வெகுவாகப் போற்றுவர்.

மில்க்வைற் தொழிலதிபரின் பனையபிவிருத்திக்கு பழைய பாராளுமன்ற உறுப்பினர் தம்பி கதிரைவேற்பிள்ளையவர்களின் பிள்ளைகள், தந்தையார் வழியில் ஏராளமான பனம் விதைகளை அன்பளிப்புச் செய்து வருகின்றார்கள்.

தொழிலதிபரின் மரம் நாட்டும் பணிக்கு மயிலிட்டி நன்னித்தம்பி வைத்தியநாதன் அவர்களின் உறவினர்கள், காலம் நியதி தவறாமல் மலைவேப்பங்கன்றுகள் தந்துதவி வருகிறார்கள். இம் முயற்சியில் திருவாளர் சிவபாதம் அவர்களை இங்கே குறிப்பிடவேண்டும்.

## மற்றவர் மனம் நோவக் கூறலாகாது

புண்படவே வார்த்தைதனைச் சொல்ல வேண்டாம் என்பது உலகநீதி. இந்த வாக்கியத்தைப் பெரிய அரசன் ஒருவன் நன்கறியவில்லை. அவன் இலங்கையை ஆண்ட இராவணன்.

இராவணனிடம் ஆகாய விமானம் இருந்தது. அதற்குப் புஷ்ப விமானம் என்று பெயர். அவன் ஆகாய வழியே விமானத்தில் போனபோது உயர்ந்த மலையாய திருக்கைலாயத்தில் நந்திதேவர் இருந்தார். இராவணன் நந்திதேவரின் முகத்தைப் பார்த்துச் சிரித்தபடி, ''இது என்ன குரங்கு?'' என்று கூறினன். அதைக்கேட்ட நந்திதேவர், இது குரங்காயிருக்கலாம். ஆனல் ''நீயும் உனது இராச்சியமும் நாடும் எல்லாம் குரங்காலேதான் அழியப் போகின்றன'' என்ருர்.

பலகாலஞ் செல்ல இராவணன் சீதையைக் கவர்ந்ததால், இராமர், இலட்சுமணர் குரங்குக் கூட்டங்களின் உதவிகொண்டு இராவணனையும் அவன் இராச்சியத்தையும் நாட்டையும் அழித்தார்கள்.

---

## முத்தமிழை முறையாகக் கற்போம்

யாழ்ப்பாணத்தில் பண்டிதர், புலவர், வித்துவான் வரிசையில் தமிழ் பயிற்றியவர்கள் ஓய்வு பெற்றுப் பெறுமதியின்றி வீடுகளில் சோம்பியிருக்கிருர்கள். யாழ்ப்பாணத்தில் தடக்கி விழுந்தால் பண்டிதர் ஒருவர்மீதுதான் விழவேண்டி நிகழும் என்று கல்கி - கிருஷ்ணமூர்த்தி கூறியது முற்றிலும் உண்மையாயினும், காலத்தால் பொருத்தமில்லாமற் போகிறதே.

பரீட்சைக்காகப் பயிற்சி நூலையும், பழைய வினுக்களுக்கு விடைகளையும் மனனஞ் செய்து, பரீட்சை மண்டபத்தில் துப்பிவிட்டு வருதல் முறையாகாது. முறையாகத் தமிழ் படித்ததற்குப் பழைய முறையில் வாரமொரு நாள் அயலில் உள்ள பெரியவர்களிடம் தமிழைப் பயிலுங்கள். அபிமானம் உண்டாதல் வேண்டுமாயின் நற்றமிழ் படித்து நன்மையடையுங்கள்.

வெளிநாட்டார் தமிழார்வம்கொண்டு தமிழ் படிக்கும்போது, நம்மவர் தமிழை நாளுக்கு நாள் மறத்தலாகாது. மாணுக்கர், மாணுக்கியர் தமிழுணர்ச்சி பெறுதல் அவசியமாகும். தமிழர் வாழ்வு தமிழில் அமைதல் வேண்டும். தமிழைப் பிழையறப் பேசவும் எழுதவும் பயிலவேண்டும்.

தமிழரின் வாழ்க்கை முறையை நன்ருக அறிவதற்குத் தமிழரின் பண்பாட்டுச் செல்வமான சங்க நூல்களை அறிவதில் நம்மவர் ஆர்வங்கொள்ளல் அவசியம். நமக்குரிய மொழியை நாமே பாதுகாக்காவிடின் வேறெவரும் அதைக் காக்க முன்வரமாட்டார்கள். 'சங்கத்தமிழ் மூன்றும் தா' என்று ஔவைப் பாட்டியார் நமக்காகப் பிள்ளையாரை வேண்டியுள்ளார்.

## Simple English for you

1. *Assemple the pairs:-*

A:- needle, scissors, spade, ladder, rifle, pencil, pen, brush, boot, horse.

B:- reading, sewing, riding, cutting, painting, digging, writing, drawing, climbing, shooting.

2. *Find out the young ones of:-*

A:- cat, dog, sheep, cow, goat, hen, duck, mare, bear.

B:- cub, foal, kitten, puppy, duckling, chicken, lamb, calf, kid.

3. *What you should do:*

A:- 1. Look 2. Think 3. Examine

B:- 1. Before you speak
2. Before you buy
3. Before you leap

4. *Assemble things that go togethers:*

A:- brush, table, bread, collect, hammer, rice, vadai, verty, sari, dosai.

B:- lie, comb, chair, shawl, jacket, sambal, butter, plantain, curry, nail.

---

## மணியோசை

மன்னர் மாவட்டத்தில் மடுத்திருப்பதிக்கு அப்பால் தெட்சண மருதமடு என்பது காடுகளுக்கு மத்தியில் எவ்வித வசதியும் இல்லாமல் அமைந்த ஒரு சிற்றூர். நெருப்புப் பெட்டி, மண்ணெண்ணெய் வாங்குவதற்கு நான்கு மைல் தூரம் நடந்து, ஆனைக்காட்டுக்கூடாக மக்கள் போகின்ருர்கள் என்பதைச் சென்று பார்த்தால்தான் தெரியும். இவர்களுக்குத் தண்ணீர் என்ருல் மழையைத் தவிர வேருென்றுந் தெரியாது. அதுவும் பொழிவது மிகக் குறைவு. ஒரு பாடசாலையும், தலைமையாசிரியருக்கான ஒரு விடுதியும்தான் ஓடு கண்ட வீடு. ஓலைக் கொட்டில், வைக்கோல் கொட்டில் இடையிடை உண்டு. மாடுகள் மரங்களின் கீழ் படுத்துறங்கும். எவ்வித வசதியும் இல்லாத இவ்விடத்தில் பங்குனி சித்திரையில் தேன் கிடைக்கிறது. இதைவிட வேறு எந்த வருமானமும் கிடையாது.

சைவசமயத்தவரான இவர்கள் முருகனை வழிபடுகிருர்கள். முத்துமாரியம்மனுக்கு ஒரு சிறு ஆலயம் உண்டு. தூபதீபம் முதலியவற்றுக்குத் தட்டுப்பாடு. இப்படியாகவும் இளைஞன் ஒருவன் பக்தியோடு பூசை செய்து பாற்புக்கை படைத்துப் பிரசாதமாகக் கொடுத்தமை அமுதமாயிருந்தது. முருகன் ஆலயத்துக்கு மில்க்வைற் தொழிலதிபர் திருவாதிரை நாளில் ஒரு பெரிய மணி உபகரித்தமை அந்த ஊரவர்களுக்குப் பெருமளவில் பக்தியைத் தூண்டியுள்ளது.

---

★ மனிதனிடம் நிறை நிரந்தரமாய் அமையும் ★

# உங்களுக்குத் தெரியுமா?

(விடைகள் வேறிடத்தில்)

1. இந்தியாவில் மோகல் அரசைத்தாபித்தவர்?
2. நான்கு தந்தங்கள் உள்ள பன்றியுள்ள நாடு?
3. பெரிய பற்கள் உள்ள குரங்கின் பெயர்?
4. பிரமசாரிகளிடம் வரி வசூலித்த நாடுகள்?
5. ஈறுக் நாட்டின் ஏற்றுமதியான மிருகம்?
6. சின்ன யாவா எனப்பட்ட தீவு?
7. பல்ரிக்கடல் சுத்த நீராயிருப்பது ஏன்?
8. பாரசீகத்துக்கும் இந்தியாவுக்குமிடைப்பட்ட வளைந் தரம்?
9. மூங்கிலின் மிகக்கூடிய நீளம்?
10. அவ்கானிஸ்தானில் குகைகள் அதிகமுள்ள இடம்?
11. மைசூரின் பெரிய நகரம்?
12. கிழக்குத்தேய வெனிஸ் நகரம் என்பது எது?
13. சுழல் காற்றினால் அதிகம் பாதிக்கப்படும் தீவு?
14. ஸ்பெயின் நாட்டின் பெரிய கைத்தொழில் நகரம்?
15. பெரிய செவியுள்ள பறக்கும் பிராணி?
16. காசிநகரம் அமைந்த மாநிலம்?
17. காசியிலிருந்து கற்கத்தாவின் தூரம்?
18. இந்தியாவில் கோயில் நிறைந்த நகரம்?
19. இந்தியாவில் கல்வித்தரம் கூடிய நகரம்?
20. பழைய யேமனியை ஒரு நாடாக்கியவர்?
21. பைபிள் மொழிபெயர்க்கப்பட்ட பழைய மொழிகள்?
22. இந்தியாவின் நந்தவனம் எனப் பெயர்பெற்ற நகரம்?
23. பிடரிமயிர் உள்ள எருதுகள் வாழும் நாடு?
24. நீலமலைகள் உள்ள நாடு?
25. அதி தீவிர சமவுடைமை எனப் பெயர்பெற்றது?

## பொங்கற்பண்டிகை

நாகரிகம் பண்பாடு சான்றாண்மை பெற்ற இனத்தவர் தத்தமக்குரிய பண்டிகைகள் விழாக்கள், கொண்டாட்டங்கள் முதலியவற்றைக் கொண்டாடத் தவறுவதில்லை. தமிழ் பேசும் இனத்தவருக்குத் தைப்பொங்கல் ஒரு தேசிய பண்டிகையாகும். தானியவுணவு கொள்பவர்கள், தானியங்களின் விளைவுக்கு உதவியாக நிலவும் சூரியனுக்கு ஒரு நன்றிக்கடன் எனக்கருதுவதில் எவ்வித வேற்றுமையுணர்வும் தலைகாட்டுவதில்லை. பொங்கல் பண்டிகை சமய பேதங்கடந்தது. உலகுக்குக் கண்ணாகவுள்ள சூரியனை "சொல்" என்னும் பெயரால் மேற்கு நாட்டவர் போற்றியதுண்டு. முற்காலத்தில் சூரியனுக்குப் பலியிடும் வழக்கம் கிரேக்க மக்களிடையே நிலவியது. அவர்கள் சூரியனுக்குக் கடற்கரை மணலில் எருத்துமாட்டைப் பலியிட்டு ஆகுதி செய்வதால் வீரம், புகழ், வெற்றி, வாழ்வு கிடைக்குமென்று முற்றாக நம்பியிருந்தனர்.

உலகத்தின் நிலை பேறுக்கும் ஆக்கத்துக்கும் காரணமான சூரியன் இருந்த இருப்பில் இருப்ப எத்தனை அண்டங்கள், உலகங்கள் அதைச்சுற்றி வருகின்றன. இன்றைய விஞ்ஞானிகள் சூரியனின் ஆற்றலை, சக்தியை மேலும் பெற்றுக்கொள்வதற்கான பல சாதன முறைகளைத் தயாரித்துள்ளார்கள். சூரியசக்தி என்பது இனிப் பல தேவைகளுக்குப் பயன்படப்போகிறது.

## அறிந்துகொள்ளுங்கள்

### 5. தானங்கள்

தானங்கள் மனமகிழ்வோடு மற்றவர்களின் வாழ்வுக்குக் கொடுக்கப்பெறுபவை. அவை கொடுப்பவரையும் கொள்பவரையும் வாழவைக்கும். அவை பூதானம், கோதானம், அன்னதானம், வஸ்திரதானம், சம்பத்தானம், வித்தியாதானம் என்றெல்லாம் வழங்கியவை. இன்று சிரமதானம், இரத்ததானம் முதலியனவும் சேர்ந்துள்ளன.

### 6. தியானம்

மனம் இறைவனிடத்தில் இரண்டறக் கலந்துவிடும் வண்ணம் அவரை இடைவிடாது நினைப்பதற்குத் தியானம் என்று பெயர். அது அருவமாக நினைத்தல் நிர்க்குணத் தியானம் ஆகும். இறைவனின் ஏதாவது திருவுருவத்தைப் புருவமத்தி, இதயம், நாபி முதலியவற்றுள் ஏதாவது ஓரிடத்தில் நிறுத்தித் தியானித்தல் சகுணத்தியானம் ஆகும்.

### 7. மந்திரம்

மந்திரம் என்றால் நினைப்பவனைக் காப்பது என்று பொருள். மிருத்யுஞ்ஜய மந்திரம் என்பது உயிர்ப்பூட்டும் மந்திரம். இது விடம், விபத்து, நோய் முதலியவற்றைத் தடுக்கும், நீக்கும், குணமாக்கும். இதைப் பக்தியுடன் 108 முறையாவது புனிதமாக நினைத்தல் வேண்டும். இது மரணத்தினின்றும் காப்பதுமாகும்.

"ஓம் த்ரயம்பகம் யஜாமஹே
சுகந்திம் புஷ்டி வர்த்தநனம்
உர்வாருகமிவ பந்தநாந்
ம்ருத்யோர் முக்ஷீய மாம்ருதாத்"

## பொங்குக! பொங்குக! பொங்குக!

இல்லங்கள் தோறும் இன்பம் பொங்குக!
அனைத்துயிர்கள் மீதும் அன்பு பொங்குக!
அனைவரதும் மேம்பாட்டில் அறம் பொங்குக!

## உறுதுணையான நெல்

"நெல்லும் உயிரன்றே
நீரும் உயிரன்றே"

— மோசி கீரனர்

## வாழ்த்தொலி

கிழக்கிலங்கையிலிருந்து திருக்கோணமலைக் கவிராயர் என்பார், மில்க்வைற் தொழிலதிபரை நன்றாக வாழ்த்திப் பல பாடல்கள் பாடியனுப்பியுள்ளார். அவர் வாழ்த்துக்களுக்கு நன்றி.

★ சிரமத்தைப் பாராது சீருடன் செய்பவன் சிறந்தவன் ★

## பிறநாட்டவர் இப்படியும் சொன்னார்கள்

1. ஒரு செயலைக்கொண்டு வீரனை மட்டிடலாகாது
2. வரலாற்றுக்காரனின் பார்வை தலையின் பின்பக்கத்தில்
3. கையில் பணமில்லாவிடினும் வாக்கில் இனிமை வேண்டும்
4. நேர்மை வறியவருக்கும் செல்வருக்கும் கவசம்
5. நம்பிக்கையில்லா இடத்தில் முயற்சியும் இல்லை
6. ஒரு குதிரையில் இருவர் ஏறினால் ஒருவர் பின் இருக்கவேண்டும்
7. புகை, மழை, மனைவி ஒருவரை வீட்டைவிட்டுத் துரத்தலாம்
8. நான் சத்தமிட்டால் அல்லது சத்தம் எனக்குப் பிடிக்காது.
9. சோம்பேறியும் சுவரில் மணிக்கூடும் ஒன்று
10. ஞானம் ஆன்மார்த்த இறகுகள்
11. உடம்பில் காயம் ஆறினாலும் அவமானம் ஆறாது
12. நன்றாகக் கேட்காதவர் நீதி வழங்கமுடியாது
13. நீதி முடமாகி குருடானால் நாம் என் செய்வது?
14. எதிர்காலத்தைப்பற்றி எவர்க்குமே தெரியாது
15. பெண்களின் கண்ணீர் அமைதியான பேச்சு


## அன்பின் செயல்

உயிரை இயக்கிடும் அன்பு
உணர்வை இயக்கிடும் அன்பு
துயரை அழித்திடும் அன்பு
தூய்மை பெருக்கிடும் அன்பு
குற்றத்தைப் போக்கிடும் அன்பு
குறைகளை நீக்கிடும் அன்பு
சுற்றத்தை ஓம்பிடும் அன்பு
சூழ்ச்சியை வென்றிடும் அன்பு
பண்பை வளர்த்திடும் அன்பு
பாசம் வளர்த்திடும் அன்பு

— தழுவல் தி. ந. அறிவொளி

## யாழ்ப்பாணி

யாழ் என்னும் இசைக்கருவிபோல் இனிய நரம்புக் கருவியில்லை என்பர். பாணர் என்னும் பெயர்பெற்றவர்கள் யாழ் வல்லவர்கள். யாழ் பல நரம்புகளைக்கொண்டது. நரம்புகளின் எண்ணிக்கையையும் அமைப்பையும் கொண்டு அவை வெவ்வேறு பெயர்பெற்றன. ஒற்றைத் தந்தியுடையது மருத்துவ யாழ். ஒன்பது தந்திகள் உடையது தும்புருயாழ், நூறுதந்திகள் உடையது கிசகயாழ், ஆயிரம் தந்திகளையுடையது நாரதப்பேரியாழ். மீனின் வாய் முதல் வால்வரை அமைவுபெற்ற யாழ் மகரயாழ். பழைய காலத்து மன்னரைத் துயில் எழுப்புவதும், நித்திரையாக்குவதும் மகரயாழ் என்பர். ''வையம் உடையான் மகர யாழ் கேட்டருளும் தெய்வச்செவி'' என்பது நளன் கதை.



## நடேசன் புகழ் வாழ்க!

**21-6-1895 — 15-1-1965**

தஞ்சை சுப்பையா நடேசன் B. A., B. L., F. R. E. S. சட்டத்தரணி, நகரசபை உறுப்பினர், தரிசனத்திரயம், ஆசிரியர், பரமேஸ்வராக் கல்லூரி ஆசிரியர், அதிபர். முகாமையாளர், அரசாங்கசபை உறுப்பினர், பாராளுமன்ற உறுப்பினர், தபால் தந்தி தகவல் மந்திரி, ஆரிய திராவிட அபிவிருத்திச் சங்கத் துணைத்தலைவர், பல்கலைக் கழக உறுப்பினர், இலக்கிய கலாநிதி, மேற்சபை உறுப்பினர், சகுந்தலை வெண்பா ஆசிரியர், செந்தமிழ், வடமொழி, ஆங்கிலமொழிப் புலவர், தமிழ்விழா, இசை விழா, சித்தாந்த விழா அமைப்பாளர்.

''ஆங்கிலமும் செந்தமிழும் ஆர்வமுடன்
ஒப்பிட்டுப் பயின்றோர் நாளும்
ஓங்குபெருங் காப்பியத்தின் சுவையுணர்ந்து
போற்றிடுநல் லுரவோர் யார்க்கும்
தீங்குகரு தாதமனச் செம்மையினார்
சித்தாந்தச் செல்வர் அன்பின்
பாங்குடைய சகுந்தலை வெண்பாப்
பகர்ந்தார் நடேசர்புகழ் பரவி வாழ்க.''

— வெள்ளைவாரணனார் —

## ஆங்கில அடுக்குமொழிகள் சில:

gaity and grace
general and universal
generous and humane
gentle and amiable
glitter and glamour
gloomy and morose
glorious and gorgeous
goodwill and merriment
govern and overrule
grace and dignity

★ சுயநலத்துக்கு நிகரான கேடு எங்கும் இல்லை ★



## வருகைபுரிவார் வாரிவழங்குவோமாக

### மட்டக்களப்பு ஜீவனானந்த சுவாமிகள்

மட்டக்களப்பு கல்லடி உப்போடை இராமகிருஷ்ண மடத்துப் பெரியவர் உயர்திரு. ஜீவனானந்தசுவாமிகள் பல்லாண்டுகளாகச் செய்துவருகின்ற உயிர்ப்பணி உலகப் புகழ்பெற்றது. சிறுவர்களை மனிதராக்கும் பெரும்பணியை எவரும் அங்குச்சென்று தங்கியிருந்து அவதானிக்கலாம், அபிமானங்கொள்ளலாம், ஆதரவளிக்கலாம். கோழி அடை காத்துக் குஞ்சு பொரித்தல் ஒருவகைத் திட்சை என்று தான் சொல்லவேண்டும். தாயாய், தந்தையாய், குருவாய் மூவுருவும் ஒருருவாய் இருப்பவர் சுவாமிகள். பிள்ளைகளுக்கு வேண்டிய நன்னடையையும் அரசன்போல நல்கி வருகின்றார். ஆதரவற்ற பிள்ளைகளுக்கு அருமையான சுற்றந் தொடர்பு சூழல் என்பனவற்றைப் புனிதமாகத் திவ்வியம் பழுத்த மடத்தில் ஆக்கிக்கொடுத்தவர் சுவாமிகள். மட்டக்களப்பை மட்டந்தட்டிய பெரும்புயல் மடத்தையும் மண்மேடாக்கிவிட்டது. மனந்தளராத சுவாமிகள் தம் குஞ்சுகளை இறக்கையுள் அடக்கி ஒரு மூலையில் குந்தியிருந்த தவக்கோலத்தைக் கண்டவர்கள் செய்த உபகரிப்பால் மடம் மறுமலர்ச்சியடைந்து வருகிறது.

இனி பெண் குழந்தைகளுக்குப் புகலிடமாய சாரதா இல்லத்தை விசாலமாக நல்ல சூழலில் கசுக்கொட்டை மரச் சோலையிலே நல்ல வசதிகளோடு கட்டிமுடிப்பதற்கு இருபது லட்சம் ரூபா தேவை. இதில் இதுவரை ஒன்பது லட்சம் ரூபா கிடைக்கவே கட்டடம் கவினுற எழுந்து வருகிறது. இந்த அறச்சாலை உருவாவதற்கு அன்பர்களின் அறக்கொடை அதிகமாகத் தேவை. சுவாமிகள் வருகை புரிவார். வாரி வழங்குவோமாக. வடக்கு வழங்கினால் கிழக்கு வாழும். இம்மையில் இட்டதருமத்தை மறுமையில் மாற்றிக்கொள்ளலாம்.

## சைவம் மணக்கும் தமிழ் நூல்கள் சில

51. சித்தாந்த சைவ இரத்தினாவளி
    பால்வண்ண முதலியார்
52. சித்தாந்த ஞானபோதம்
    சோமசுந்தரநாயக்கர்
53. சித்தாந்த தீபிகை
    சிவாக்கிரயோகி
54. சித்தாந்த நிச்சயம்
    திருநாவுக்கரசு தேசிகர்
55. சித்தாந்த பஃறொடை
    அம்பலவாண தேசிகர்
56. சித்தாந்த பிரகாசிகை
    சர்வான்மசம்பு சிவாசாரியர்
57. சித்தாந்த மரபு கண்டனம்
    சிவஞான சுவாமிகள்
58. சித்தாந்த வசன பூஷணம்
    பூவை கலியாணசுந்தர முதலியார்
59. சித்தாந்த வுந்தியார்
    சோமசுந்தர நாயக்கர்
60. சித்தாந்த பிந்து
    இராமச்சந்திர சாத்திரி
61. சிவகர்ணாமிர்தம்
    சபாபதி நாவலர்
62. சிவகவசம்
    வரதுங்க பாண்டியன்
63. சிவகீதை வசனம்
    இராமசாமி தீட்சதர்

## The rule of the Three

1. *Three things to govern:-*
   Temper, Tongue, conduct
2. *Three things to cultivate:-*
   Courage, Affection, Gentleness
3. *Three things to command:-*
   Thrift, Industry, Promptness
4. *Three things to dispise:-*
   Cruelty, Arrogance, Ingratitude
5. *Three things to wish for:-*
   Health, Friends, Contentment
6. *Three things to admire:-*
   Dignity, Gracefulness, Intellectual power

★ கர்மம் ஞானக்கினியால் வெந்தால் பிறப்பு இல்லை ★

# அருள் விருந்து

( ஆதாரம் – தர்மசக்கரம் )

1. கடின உழைப்பால் எதனையும் பெறலாம்
2. பெருநெறி பிடித்தால் வீண்செலவு இல்லை
3. தான் செய்த வினையினின்றும் தப்பமுடியாது
4. ஒழுக்கம் உள்ளவனுக்குக் கவலை உண்டாவதில்லை
5. சீலம் காட்சிக்கும் கருத்துக்கும் இனியது
6. நாட்டின் நாகரிகம் ஒழுக்கத்தில் தெரியும்
7. அன்பினால் அறிவு விருத்தியடைகிறது
8. திண்மை என்பது உள்மனத்தின் சால்பு
9. தியானத்தால் மனம் உறுதியடைகிறது
10. உழைக்காமல் உயர்ந்தவர் உலகில் எவருமில்லை
11. பிறர் குற்றத்தை மன்னித்து மறத்தல் அறம்
12. நம்பிக்கைக்கு நிகரான ஆயுதம் கிடையாது
13. தலைவனின் மடமை சகலருக்கும் கேடு தரும்
14. அன்பு, புனிதம், பணிவு அளப்பரிய சாதனமாகும்
15. சான்றோனுக்கு எந்தச் சூழ்நிலையும் நல்லது
16. ஏகாந்தத்தில் மனிதன் மனபரிபாகம் அடைகிறான்
17. அறநெறியில் சென்றால் ஆக்கம் தானே வரும்
18. ஏகாந்தம் உள்ளத்தை ஒழுங்கு படுத்துகிறது
19. உள்ளத்தின் இயல்பே தேவர், மனிதர், அரக்கர் தன்மை
20. தொண்டு புரிபவன் உலகத்தின் தோழனாவன்

# Learn your English

## Give one word for the Group

1. A person who takes care of our teeth.
2. The world we live on
3. A machine that makes things move
4. A paper holder in which we put letters
5. Same in size or amount
6. A building where things are made
7. A piece of open ground
8. A powder made from a grain
9. A building where cars are kept
10. A material you can see through
11. Coloured liquid used for writing
12. A liquid from fruits and vegetables
13. A place where there are books to read
14. Something that helps man to do work
15. A way of seeing pictures through lightrays
16. A machine used for writing
17. A low land between two hills

1. dentist 2. earth 3. engine 4. envelope 5. equal 6. factory 7. field 8. flour 9. garage 10. glass 11. ink 12. juice 13. library 14. machine 15. television 16. typewriter 17. valley

## பாட்டிலே கேள்வி

"பிறையணிவோன்"

1. மனைவி மகிழ பாபி லோனின்
   மன்னன் ஒருவன் தொங்கு தோட்டம்
   வனைந்து வைத்தான் பார்புகழ
   வண்ணத் தோட்டம் அமைத்ததார்?
2. வரலாற் றுக்குத் தந்தை யென்று
   வழங்கும் அறிஞன் யாரென்று
   தெரிந்தால் உனக்குச் சட்டென்று
   செப்பு நீயென் மனம்மகிழ?
3. உலகில் வாழும் விலங்கினத்தில்
   உயிரை நீண்ட நாள்தாங்கி
   நலமாய் வாழும் விலங்கெதுவோ
   நவில்வீர் விடை விரைவாக?
4. உலகிலேயே அதிக மழை
   ஊற்றும் இடத்தைச் சொல்லியங்கு
   வலுவாய் மழைபெய் காரணத்தை
   வாயைத் திறந்து சொல்லிடுவீர்?
5. நீரிற் பிறந்த பொருளுக்கு
   நீரே பகையாம், அப்பொருளால்
   பாரில் எவர்க்கும் பயனுண்டாம்
   பகர்ந்த பொருளின் பெயர் என்ன?

1. நெபுகட்நெரார்
2. ஹெருடட்டஸ்
3. ஆமை
4. சிரபுஞ்சி: புனல்வடிவான மலை
3. உப்பு

## வாழ்க! வாழ்க!! வாழ்த்து மரபு

1. பொற்கோட்டு இமயமும்
   பொதியமும் போன்று வாழ்க!
2. நன்னீர்ப் பஃறுளியாற்று
   மணலிலும் பல்லாண்டு வாழ்க!
3. இன்நீர்க் காவிரியெக்கர்
   இட்ட மணலிலும் பலவே சிறக்கவாழ்க!
4. வானத்து வயங்கு பன்மீனினும்
   வாழியர் பன்னாள்!
5. முருகவேளின் செந்தி மாநகரின் கடற்கரை
   மணலிலும் நீண்டநாள் வாழ்க!
6. வெங்கதிர்ச் செல்வன் போலவும்
   தண்கதிர் மதியம்போலவும் நிலைத்து
   வாழ்க!
7. வழிபடு தெய்வம் காப்பப் பழிதீர்செல்வ
   வழி வழி சிறந்து பொலிமின்! [மொடு

★ மடையன் உள்ளத்திலும் மாண்பு மறைந்துள்ளது ★

## பசி, பிணி, பகைபோக

பசியும் பிணியும் பகையும் போய், வசியும் வளனும் நட்பும் நிலவ முற்காலத்தில் தமிழ்நாட்டில் இந்திர விழா நடைபெற்றது. இருபத்தெட்டு நாள்கள் நடைபெற்ற விழாவில் இசை, நாடகம் முதலிய கலைகள் களிநடம் புரிந்தன. வசி என்னும் மழையைத் தருபவன் இந்திரன்; அவன் தேவர்க்கு அரசன்.

நாட்டில் செங்கோல் செலுத்துபவன் இறைவனுக்கு நிகரானவன். அவன் விளைவுக்கு வேண்டிய நீர்ப்பாசன வளத்தை முதலிற் செய்வன். குளந்தோண்டுதல் நீர்வளம் பெருக்குதலாகும். நீருயர்ந்தால் நெல்லுயரும். நெல் விளைந்தால் பசி நீங்கும். ஏரி நிறைந்த செல்வத்தைத் திருநாவுக்கரசுநாயனுர் பாடியருளினர். ஊருணி நீர் நிறைந்தவண்ணத்தைத் திருவள்ளுவர் பாடினர். ஊருணி என்பது குடிப்பதற்காக நீர் தேங்கிய குளம். அதில் கால் கழுவுதல், நீராடுதல், உடைகள் தோய்த்தல் நிகழமாட்டா. பெண்கள் குடம் குடமாய் நீர்மொண்டு போவர். பசியும் பிணியும் பகையும் போயகன்ற நாடே நாடு. ''உறுபசியும் ஓவாப்பிணியும் செறுபகையும் சேராதியல்வது நாடு'' இது திருக்குறள் கண்ட நாடு.

## கொத்தான்

முடக்கொத்தான் எனவும் வழங்கும் இந்தக்கொடி வளவுகளில் மூலை முடுக்கெங்கும் தாவிப் படர்ந்து வளரும். ஆகாசவல்லி என வடமொழியிலும், மலையாளத்திலும் வழங்கும் இம்மூலிகை; உரமாக்கி, உடல்தேற்றி, குளிர்ச்சியுண்டாக்கி என்றெல்லாம் மகிமைபெற்றது. அயர்ச்சி, பித்தநோய், மூத்திரக்கிரிச்சரம் முதலிய நோய்கள் இதனுல் நீங்கும். சிறுபிள்ளைகளுக்குக் கசாயமிட்டுக் கொடுக்கக் கணைச்சூடு தணியும்.

கொடியை உலர்த்தி நல்லெண்ணெயில் காய்ச்சித் தலைக்குத் தடவக் கூந்தல் கறுத்துச் செழித்து வளரும் இதனைப் பொடிசெய்து, இஞ்சிச்சாறும் வெண்ணெயும் கலந்து பூசுவதால் புண்கள் ஆறும். இதன்சாறு பருகுவதற்கு ஏற்றது. தேகபலம் உண்டாக்குவது;

சித்தர் அறிவார் செறிகுழலே! நீகேளாய்
கொத்தான் மிகக்குளிர்ச்சி கொண்டகாற் — சுத்தப்
பிரமேகம் உட்கிரிச்சம் பித்தம் இளைப்பும்
அறுமே தவறு தறி.

**உங்களுக்குத் தெரியுமா? விடைகள்.**

1. பேபர். 2. பபிலுசா. 3. பவுன். 4. இத்தாலி, யேமனி. 5. குதிரை. 6. பாலி. 7. பல ஆறுகளின் சங்கமத்தால். 8. பலுசிஸ்தான். 9. நூறு அடி. 10. பமியன். 11. பங்களூர். 12. பாங்கொக். 13. பாபடோஸ் 14. பாபிலோனியா. 15. வெளவால். 16. ஐக்கிய மாகாணம். 17. நானூற்றிருபது மைல். 18. காசி. 19. வங்காளம். 20. பிஸ்மாக். 21. கிறிக், லத்தீன் 22. பீகார். 23. கனடா. 24. யமிக்கா. 25. பொல்சிவிசும்.



பனை
பதில்
கூறுகிறது

பனை பதில் கூறுகிறது என்னும் தலைப்பில் மில்க்வைற் செய்தியில், நிபுணர் சம்பந்தம் அவர்கள் பனையபிவிருத்தி சம்பந்தமாக நேயர்களின் கேள்விகளுக்கு விபரமாக விடையும் விளக்கமும் தருவார். நேயர்கள் தங்கள் கேள்விகளை, சந்தேகங்களை ஸ்ரீ. கே. சம்பந்தம், பனையபிவிருத்தி ஆலோசகர், 114/3 பிறவுண்வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு எழுதுங்கள்.

## பெரும்படிப்பில்லாத பெரியார்

கல்லூரிப் படியேறுதவர் பல்கலைக்கழகத்தையணுக வில்லை. மரபுவழித் தமிழறிந்து, விடாமுயற்சியால் வாசித்துத் தெளிந்து நூற்றுக்கணக்கான ஆராய்ச்சிக் கட்டுரைகளும் பதினெட்டுப் பெருநூல்களும் எழுதியவர் மயிலாப்பூர், சீனிவாசநாயகர் வேங்கடசாமி என்பவராவர். அவர் 16-12-1900 ஆம் நாளில் தோன்றியவர்.

அவர் எழுதிய நூல்கள் கிறித்தவமும் தமிழும் பௌத்தமும் தமிழும், சமணமும் தமிழும்; மகாபலிபுரத்துசைன சிற்பம். இறையனுர் அகப்பொருள் ஆராய்ச்சி பௌத்தகதைகள்; புத்தசாதக கதைகள். கௌதமபுத்தர். அஞ்சிறைத்தும்பி. மகேந்திரவர்மன். மூன்றும் நந்திவர்மர். சாசனச்செய்யுள் மஞ்சரி. தமிழர் வளர்த்த அழகுக்கலைகள், மறைந்துபோன தமிழ் நூல்கள், இறைவன் ஆடிய எழுவகைத் தாண்டவம். மனேன்மணி உரை. பத்தொன்பதாம் நூற்றுண்டு இலக்கியவரலாறு.

## தமிழ்ப்பண்பு

''அறத்தின் வழி நிற்றல்
ஆண்மையில் உயர்தல்
இன்பத்தில் திளைத்தல்
ஈதலிற் சிறத்தல்
உள்ளத்தில் தெள்ளியராதல்
ஊக்கத்தில் தளராதிருத்தல்
எவரையுந் தமராய்க் கொள்ளுதல்
ஏற்றத்தாழ்வின்றி வாழ்தல்
ஐயந்திரிபறப் பேசுதல்
ஒழுக்கத்தைக் காத்தல்
ஓரஞ்சாராது நிற்றல்
ஔவியந்தன்னை அகற்றல்''

— கி. ஆ. பெ. விசுவநாதம்

★ அன்பைப்போல ஆயுதம் ஆட்சிபுரியாது ★

முற்றொடர்:

## தமிழில் வழங்கும் வடமொழிகள் சில

| | | |
|---|---|---|
| புண்டரீகம் | — | தாமரை |
| புண்ணியதலம் | — | திருப்பதி |
| புண்ணியதினம் | — | நன்னாள் |
| புண்ணியபாவம் | — | நல்வினை தீவினை |
| புண்ணியம் | — | நல்லூழ், நல்வினை |
| புண்ணியாவசனம் | — | புனிதமாக்குதல் |
| புத்தி | — | அறிவு |
| புத்தியீனம் | — | அறிவின்மை |
| புத்திரபாக்கியம் | — | பிள்ளைச்செல்வம் |
| புத்திரன் | — | மைந்தன் |
| புத்திரி | — | மகள் |
| புராரி | — | சிவன் |
| புராணம் | — | பழைய கதை |
| புருஷத்துவம் | — | ஆண்டன்மை |
| புருடன் | — | ஆண்மகன் |
| புருடார்த்தம் | — | உறுதிப்பொருள் |

# Thoughts to Remember

Any young man who makes dowry a condition of marriage discredits his education and his country and dishonours womanhood.

It is easy enough to take a vow under a stimulating influence. But it is difficult to keep to it especially in the midst of temptations.

— *Gandhi*

★ ★ ★

An evil action only smooths the path for other evil acts, evil thoughts uncontrollably drag one along the path.

— *Tolstoy*

★ ★ ★

He who can does, He who cannot teaches.

— *Bernard Shaw*

★ ★ ★

A thankful heart is not only the greatest virtue, but the parent of all other virtues.

— *Ciciro*

★ ★ ★

That which is striking and beautiful is not always good, but that which is good is always beautiful.


The happy wife is not the one who has married the best man, but one who makes the best of the man she has married.

— *Ninon de Linclos*

### கூட்டுறவுச் சங்கத்தாரின் வைத்தியசாலை

ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் அண்மையில் ஆரம்பித்த வைத்தியசாலையை வளம்படுத்துவதற்கு, மில்க்வைற் தொழிலதிபர் படுக்கைவிரிப்புகள், துவாய்கள் அன்பளிப்புச் செய்து ஆதரவுகொடுத்துள்ளார்.

### புதிய கட்டடம்



மட்டக்களப்பு கல்லடி உப்போடையில் இராமகிருஷ்ண மடத்துச் சுவாமியார், ஆதரவற்ற சிறுமிகளுக்கு அமைத்துவரும் கட்டடத்தின் ஆரம்பத் தோற்றம்.

## குடியேற வேண்டும்

இன்று ஒவ்வொரு வீட்டிலும் குழந்தைகள் பெருகி, வீடு வளம் பெற்று வாழ்வுயர்ந்து வரும்போது இடம் போதாமல் வருகிறது. உழைப்பும் பற்றுக்குறையாகிறது. சும்மா இருக்க வருமானம், எல்லோருக்கும் வேலை வாய்ப்பு வசதிகள் இல்லை.

ஐரோப்பியர் தங்கள் சிறிய நாடுகளை விட்டு, அமெரிக்கா, ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா முதலிய தூர தேசங்களுக்குச் சென்று குடியேறி வசதியும் வளமும் உண்டாக்கி வாழ்வாங்கு வாழ்கின்றூர்கள். இன்று அமெரிக்கர், அவுஸ்திரேலியர், கனேடியர் என்பவர்கள் யாவரும் பழைய ஐரோப்பியர்களே.

நாங்கள் அண்மையில் உள்ள முழங்காவில் முதலிய வளங் கொழிக்கும் பகுதிகளுக்குப் போகத் தயங்குகிறோம். அங்கே சென்று குழாய்க் கிணறமைத்து, வாழை, காய்கறிப் பயிர் செய்கிறவர்கள் நல்ல விளைவைக் காண்கிறூர்கள். அங்கே மா, பலா, கசுக்கொட்டை முதலியன செய்வதற்குப் பெருமளவில் நிலமுண்டு. ''அன்னை பூமி அழைக்கிறாள். அங்கே செல்க தம்பிமார்'' என்பது மில்க்வைற் தொழிலதிபரின் பழைய பல்லவி. இதை அவர் திரும்பத் திரும்பப் பாடுகிறூர், பாடிக்கொண்டே இருக்கிறூர்.


### கைதடி சைவச் சிறுவர் இல்லம் வளமும் நிழலும் பெற வசதி

யாழ்ப்பாணத்து கைதடி சைவச் சிறுவர் இல்லத்தின் அபிமானியும் அநுதாபியாயும் அடிக்கடி பணிபுரியும் மில்க்வைற் தொழிலதிபர் இந்த மழையைப் பயன் செய்து, பெருமளவில் தென்னையும் நிழல் மரங்களும் பயன்தரு மரங்களும் நாட்டியுள்ளார்.

### குளப் பணியும் மரப் பணியும்

இந்தியாவின் பல்வேறு படைப் பிரிவினர் அமைதிக் காலத்தில் அருமையான தொண்டு செய்து வருகிறூர்கள். அவர்கள் செய்து வரும் குளப் பணியும், மரம் நாட்டும் பணியும் மகத்தானவை. உலகப் புகழ்பெற்ற மாவீரனுய நெப்போலியன், அமைதிக் காலத்தில் செய்த பணிகள், ஆக்கபூர்வமான தொண்டுகள் வரலாற்றுப்புகழ் பெற்றன.

★ பிரார்த்தனையால் உள்ளம் தூய்மையடையும் ★



### மகாத்மா காந்தியடிகளின் ஆசை

''எனக்கு அடுத்தபிறப்பு நிகழுமாயின் நான் தமிழனுகவே பிறக்க ஆசைப்படுகிறேன்.''

### வட்டக்கச்சி தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்

வட இலங்கையில் நல்ல முறையில் அபிவிருத்திப் பாதையில் அணிநடை நடக்கும் இளைஞர்களின் தேவையறிந்து, அவர்களின் சேவைக்கு உதவியாகப் போதியளவு மண்வெட்டிகள், தாச்சிச் சட்டிகள் போன்ற கருவிகளை நீண்டகால உபயோகத்துக்கு உபயோகிக்க இரவலாக வழங்கிய தொழிலதிபர் கனகராசா அவர்களின் உதவியை இளைஞர்கள் பெரிதும் பாராட்டியுள்ளார்கள்.

## கைத்தறி நமக்குக் கைகொடுக்கும்

ஒரு காலத்தில் இங்கிலாந்தில் கைத்தறி நெசவு பெருமளவில் பொருளாதார வசதி வாய்ப்பளித்து வந்தது. அறிஞர்களான ஆங்கிலேயர் நெசவுத் தொழிலபிவிருத்திக்கான கருவிகளைக் கண்டுபிடித்து அத்தொழிலை முன்னேற்றமடையச் செய்தனர். அங்கே குடிசைத் தொழிலாயிருந்த நெசவு யந்திரமயமான காலத்தில் உண்டான மாற்றம் கைத்தொழிற் புரட்சி என வரலாற்றில் இடம் பெற்றுள்ளது.

தமிழர் வாழ்வில் உழவுக்கு அடுத்தபடியாகத் தொழில் இடம் பெற்றபோது, முதலில் அமைந்தது நெசவு. நூற்றலும் நெசவும் தமிழர் வாழ்வில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் கைவந்த கலைகளாயிருந்தன. தமிழரின் கைவண்ணத்தை, கலிங்கம் முதலிய மெல்லிய துணிகளை கிரேக்கர், உரோமர் முதலிய பழைய நாகரிக மக்களே பயன்படுத்திப் பாராட்டியுள்ளார்கள். மத்திய காலத்தின் பின்னரும் தமிழ் நாட்டுப் புடைவை வகைகள் ஐரோப்பிய நாடுகளில் மதிப்புப் பெற்றிருந்தன.

பருத்தி விளைவில்லாத இங்கிலாந்தில் அவர்கள் பஞ்சை இறக்குமதி செய்து நூலாக்கி நெசவு செய்து ஏற்றுமதி செய்யுமளவில் முன்னேறியபோது, முன்னோடிகளாய தமிழர் இலங்கையில் ஆமை வேகத்தில் ஊர்ந்து அந்தத் தொழிலை அடியோடு கைவிட்டு விட்டார்கள்.

அண்மையில் உண்டான அபிமானங் காரணமாகத் தமிழ் நாட்டில் கைத்தறி நெசவு 30,00000 தறிகளில் இயங்குகின்றது. அதற்கு மகாத்மா காந்தியடிகள், இராசகோபாலாசாரியர் முதலானோர் முழுமூச்சாக வழிவகுத்தார்கள் எனலாம். எங்கள் நாட்டில் வெளிநாட்டுத் துணிகள் இறக்குமதித் தடையுற்றிருந்தபோது ஒழுங்கைகள் வீதிகள் எங்கும் டக் டக் சத்தம் கேட்டது. அதன் பின் அது வெகுவாகக் குறைந்துபோயிற்று.

கைத்தறித் துணிகளில் அபிமானங் கொள்பவர் தொகை அதிகரித்தால் அத்தொழில் ஆதரவு பெற்று அதிகரிக்கும். பெரியவர்கள் மனமிரங்கி ஆடம்பரத்தை ஓரளவு ஆடைகளைப் பொறுத்த அளவில் சுருக்கிக்கொண்டால் கைத்தறி தலைதூக்கும். வேலையற்றவர், ஆதரவற்றவர் இன்னும் ஓய்வுநேர வேலை விரும்புவோர் விளையாட்டாக நூற்றலும் நெசவும் செய்யலாம். தன்கையே தனக்கு உதவி என்பதோடு தன் காலை ஊன்றி நெசவு செய்வதால் தன் காலில் நிற்றலும் சாத்தியமாகும். முற்காலத்தில் ஆளில்லாத பெண்கள் தாளிற் செய்த அற்புதமான அறுவை, நெசவுத் துணியாகும். இன்றைய நிலையில் வீட்டில் உள்ளவர்கள் எல்லோரும் கைகொடுத்து. ஓய்வு நேரத் தொழிலாக ஊதியம் பெறுவதற்குச் செய்யக்கூடிய மரியாதை பண்பாடு உள்ள தொழில் கைத்தறி நெசவே எனலாம்.

## சத்தியமூர்த்தியா? தியாகமூர்த்தியா?

நேற்று நடந்த விழாபோல நினைவில் இருக்கிறது. இற்றைக்கு ஐம்பதாண்டுகளுக்குமுன் சத்தியமூர்த்தி அவர்கள் பரமேஸ்வராக் கல்லூரியில் இராமநாதன் நினைவுப் பேச்சுப் பேசினார். தமிழ்நாட்டில் சுதந்திர ஆர்வத்தைப் பட்டி தொட்டியெங்கும் பாமர மக்களும் விளங்கிக்கொள்ளும் வகையில் பைந்தமிழ் பேசிவந்த சத்தியமூர்த்தி எங்கள் மத்தியில் ஆற்றொட்டம்போல ஆங்கிலத்தில் அருமையாகப் பேசினார். தம்முடைய அருமை மனைவியையும் அழகிற் சிறந்த மகளையும் அழைத்து வந்திருந்தார். தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சி வேரூன்றுவதற்கும் வியாபகமானதற்கும் அவரே மூலகாரணராவர். காங்கிரஸ் கூட்டமொன்று நடைபெற்ற ஆவடி என்னும் இடம் சத்தியமூர்த்தி நகரமாகப் பெயர்பெற்றதில் புதுமை எதுவும் இல்லை. சத்தியமூர்த்தி பேசும் வேகம்போல் நடப்பதும் வேகம். சங்கீதம், பரதநாட்டியம், தமிழ் நாடகம் எல்லாம் அவருக்கு விருப்பமான கலைகள், சந்தனப் பொட்டும், வெற்றிலை போட்ட வாயும் இன்றும் பசுமையாக நினைவுக்கு வருகிறது. அவர் இசைக் கச்சேரியில் ஈடுபாடுகொண்டமை அவர் சிறையில் இருந்த காலத்தில் சுந்தராம்பாளின் கச்சேரி கேட்க விருப்பங்கொண்ட சங்கதியால் புலனாகிறது.

### மலைநாட்டில் திருவெம்பாவை

மலைநாட்டில் கம்பளை நகரில் உள்ள அம்பகமுவ என்னும் இடத்தில் அமைந்த இந்து சங்கம் இவ்வருடம் மார்கழித் திங்களில் திருவெம்பாவை, திருப்பாவை விழாவை நல்ல முறையில் நடத்துவதற்கு மில்க்வைற் தொழிலதிபர் வேண்டிய நூல்களைக் காலமறிந்து, தேவையறிந்து உபகரித்தமைக்கு அவர்கள் பாராட்டியுள்ளார்கள்.

மகளிர் கருத்தரங்கு

## யாழ்ப்பாணப் பகுதி ஐக்கிய நாணய சங்கங்களின் சமாஜம்

வீரசிங்கமண்டபத்தில் 11-12-83 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கலகலப்பான கருத்தரங்கில் அதிகாரிகளான உதவி ஆணையாளர்கள், வளாகத்து மருத்துவ பீடத்து கலாநிதி சிவராசா, பணியன்பர் சம்பந்தம், தொழிலதிபர் கனகராசா முதலானோர் மத்தியில் திருவாட்டி வேதவல்லி கந்தையா அவர்கள் தலைமைதாங்கிப் பேசினார். அவர் செய்துவருகின்ற சேவையையும், பணியன்பர் பணியையும் பாராட்டித் தொழிலதிபர் கனகராசா பரிசுகள் வழங்கினார். மாலை நிகழ்ச்சியில் மண்டைதீவு மாதரும், நீர்வேலி மாதரும் செய்முறைகளில் பனம் பொருள்கள், ஊதுபத்திகள் செய்து காட்டினார்கள். வேதவல்லி அவர்கள் சோயா அவரையின் பால் தேங்காய்ப்பாலின் இடத்தில் பயன் செய்யும் என விரிவாகப் பேசினார்.

## பழந்தமிழ்ப் பண்பும் பண்பிகளும்

— இளவழகனார் —

| | | |
|---|---|---|
| கல்விக்கு | — | நக்கீரர் |
| அறிவுக்கு | — | திருவள்ளுவர் |
| ஆற்றலுக்கு | — | கண்ணனார் |
| உணர்ச்சிக்கு | — | போப்பெண்டிர் |
| கொடைக்கு | — | பாரி |
| வீரத்துக்கு | — | கணியனார் |
| தன்னலமறுப்புக்கு | — | அதிகமான் |
| பெருந்தன்மைக்கு | — | ஔவையார் |
| சால்புக்கு | — | ஆந்தையார் |
| அடக்கத்துக்கு | — | நள்ளி |
| தவத்துக்கு | — | இளங்கோவடிகள் |
| செய்நன்றிக்கு | — | கபிலர் |
| தன்மதிப்புக்கு | — | சித்திரனார் |
| ஆட்சிக்கு | — | கரிகாலன் |
| வழிபாட்டுக்கு | — | முதுகுடுமிப் பெருவழுதி |

## வாழவைக்கும் வாழையின் வளம்பெருக்குதல் அவசியம்

இன்றைய அபிவிருத்தி அவசியத்தில் இயன்றளவு வாழைத்தோட்டம் அமைதல் வேண்டும். வலிகாமம் வடக்கு, கிழக்கு பிரதேசங்கள் வாழைவளம் குன்றி வாடிப் போதல் முறையாகாது. தமிழர் பண்பாட்டில் எல்லாவித வைபவங்கள், பண்டிகைகள், விழாக்கள், சடங்குகள். சம்ஸ்காரங்கள் எல்லாவற்றுக்கும் வாழை தேவை. பூசைக்கும் விரதத்துக்கும் உணவுக்கும் உற்றபழம் வாழைப்பழம். முக்கனிகளில் முதற்பழமாயும் என்றும் கிடைப்பதாயும், தலைமுறை பெருகி வளப்பம் பெருகும் வாழை எம்மை வாழவைக்கும். நாம் வளவுகளில் இம்மாதம் நான்கடி வாழையாவது நடுவோமாக. வலிகாமத்தில் ஒரு பகுதி ஏற்றுமதிக் கிராமமானால் வாழை வருவாயளிப்பதில் பெருவாய்ப்பாகும்.


## காலம் பெறுமதியானது

வீணே கழியும் ஒரு நிமிடத்தையேனும் மீண்டு உபயோகிக்கமுடியாது. எனினும் இதையறிந்த பின்னும் எவ்வளவு நேரத்தை வீணாக்குகிறோம்.

— மகாத்மா காந்தி




நொடிப்பொழுதில் உங்கள் ஆடைகளின் அழுக்கை அகற்றி பளிச்சிடும் வெண்மையைப் பெறுவதற்குப் பாவியுங்கள்.

**சுப்ப மில்க்வைற் சோப்**

★ இது ஒரு மில்க்வைற் தயாரிப்பு ★

ஒரு கட்டி விலை ரூபா 6-50 மட்டுமே

10 மேலுறைகளுக்கு 1 அப்பியாசக் கொப்பி அல்லது பொலித்தீன் பாக் இனாம்.


## தென்னை வளம் பெருக வேண்டும்

வட இலங்கை வளம்பெறுவதற்குத் தென்னையபிவிருத்தி இன்னும் பெருகவேண்டும். பெரும்பாலான தென்னைகள் வட்டுச் சுருக்கிச் சோடையாய்ப்போன நிலையில் தென்னந் தோப்புகளைப் புனரமைத்தல் அவசியமாகிறது. வளவுகளில் நாலைந்து தென்னைகளாகுதல் வளரவேண்டும். என்று சுப்பிரமணிய பாரதியார் பாடியுள்ளார். இன்று தென்னிலங்கையிலும் வடமேற்கிலும் கட்டையினம், அதிகம் காய்க்கும் இனம், விரைவில் காய்க்கும் இனம் என்பனவெல்லாம் கலப்பினமாய் அதிக பயன்தருகின்றன. அந்த இனங்களை எல்லாம் முந்தியடித்து நாம் வாங்கி எங்கள் பிரதேசத்தை வளம்படுத்த வாய்ப்பாக மில்க்வைற் தொழிலதிபர் அவற்றை விலைக்கு வாங்கிக் கொள்விலையில் கொடுத்து வருகிறதை எல்லோரும் பாராட்டுகிறார்கள்.

யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு. தி. நாகரத்தினம். யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர் ''சிவநெறிப்புரவலர்'' க. கனகராசா ஜே. பி. அவர்கள்
கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் 1-1-84.